# ஆண்டின் பொதுக்காலம் 26ஆம் வாரம்
# திருவழிப்பாட்டு ஆண்டு C (29-09-2013)

## திருப்பலி முன்னுரை:

ஆண்டின் பொதுக்காலம் 26ஆம் வாரத்திலிருக்கும் நாம், இன்றைய திருப்பலி வழிபாட்டில் பங்கேற்று இறைமொழிகள் நமக்குக் கூறுவதென்ன என்று அறிய முயலும் இறைமக்கள் அனைவருக்கும் என் இனிய வாழ்த்துகள். தாம் செல்வராயிருந்தும் தம்முடைய ஏழ்மையினால் நாம், செல்வராகுமாறு நமக்காக ஏழையான இயேசு கிறிஸ்துவின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

இன்றைய லூக்கா நற்செய்திக்கு மட்டுமே உரிய அருமையான ஓர் உவமை செல்வரும், லாசரும். இங்கு இயேசு கூறும் நற்செய்தியானது, உண்மையான கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அவருக்கு செவிமடுங்கள். "ஆண்டவரோடு வாழ்கின்றோம் என்ற நம்பிக்கையில் இக்காலத்தில் நாம் அனுபவிக்கின்ற, சந்திக்கின்ற துன்பங்கள் எல்லாவற்றையும் கடந்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வோம்" வானதூதர்கள் நம்மையும் ஆபிரகாம் மடியில் நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் நம்மை வாழ அழைக்கின்றார். ஆகவே நாம் அனைவரும் நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் உழைப்போம். ஏழைகள்மேல் இரங்குவோம். இறைவன் தந்த வளங்கள் அனைத்தையும் சரியான முறையில் பயன்படுத்துவோம். இறைவனின் சாட்சிகளாய் வாழ வரம்கேட்டுச் செபிப்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

## பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உமது அன்பையும், இரக்கத்தையும், செல்வத்தையும், வளங்களையும் பெற்று மகிழும் நாங்கள் அனைவரும் அவைகளை மற்றவர்களோடு பகிர்ந்து உமது சாட்சிகளாய் வாழ எமக்கு அருள் தந்து எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இப் மண்ணிலே புலம்பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும், உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நீதியின் நாயகனே இறைவா,**

உம்மைப் போற்றுகிறோம். இவ்வுலகில் இன்பம் மட்டுமே அனுபவித்தவருக்கு மறுவுலகில் விண்ணக பேரின்பத்தையும், துன்பங்களை மட்டுமே அனுபவித்தவர்களுக்கு மறுவுலகில் நிறைமகிழ்வு உண்டு என்று போதித்தீரே, உமக்கு நன்றி. நாங்கள் எங்கள் அருகில் வாழும் தேவை நிறைந்தோரை அன்பு செய்து வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உலகின் ஒளியாக உம்மை வெளிப்படுத்திய இயேசுவே,**

உம்மைப் போற்றுகிறோம். தன்னலம் என்னும் பாவத்திலிருந்தும், பிறர்மீது அக்கறை கொள்ளாமல் இன்புற்று வாழும் சமூக அக்கறையற்ற தன்மையிலிருந்தும் எங்களை விடுவித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.